000695 1636/2019

சென்னை, தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு.கே.விவேகானந்தன், இ.ஆ.ப.,
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்

செயல்முறை ஆணை எண் 16229/டி3/2020, நாள் 23.02.2021

பொருள்: நிர்வாகம் - தொழில் நுட்பக் கல்வித் துறை – அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி, அறந்தாங்கி – (லேட்) திரு.சி.வீரையா, துப்புரவுப் பணியாளரின் வாரிசுதாரர்(மகன்) திரு.வீ.கார்த்திக், என்பவருக்கு அறந்தாங்கி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் வழங்கியது - பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல்.

பார்வை: அரசாணை (3ப) எண்.15 உயர்கல்வித் (சி2) துறை, நாள் 22.12.2020

----------

பார்வையில் காணும் அரசாணையில், அறந்தாங்கி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்டு, இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.வீ.கார்த்திக், என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 28.08.2019 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. (அரசாணை இணைக்கப்படுகிறது)

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 சட்டப்பிரிவு 28 (1)-ன்கீழ், அவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 28.08.2019 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணைகள் வழங்கப்படுகின்றன.

தனியர், பணியில் சேர்ந்த நாள் முதல், மூன்றாண்டு பணிகாலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தை நிறைவு செய்ய வேண்டும். மேலும், தகுதிகாண்பருவகாலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும்.

இணைப்பு: பார்வையில் காணும் அரசாணை

ஒம்/- கே.விவேகானந்தன்
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்

பெறுநர்
திரு.வீ.கார்த்திக்,
இளநிலை உதவியாளர்,
அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
அறந்தாங்கி (முதல்வர் வழியாக)

நகல் :
1. முதல்வர்,
அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
அறந்தாங்கி
2. டி3/ தொகுப்பு கோப்பு

அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி GOVT.POLYTECHNIC COLLEGE 22 MAR 2021 ARANTHANGI-614616 அறந்தாங்கி 614 616

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது.//

உதவி இயக்குநர் (நிர்வாகம்)

சுருக்கம்

பொதுப் பணிகள் – உயர்கல்வி – தொழில்நுட்பக் கல்வி – அறந்தாங்கி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் துப்புரவுப் பணியாளராகப் பணிபுரிந்து மறைந்த திரு.சி.வீரையா என்பவரின் வாரிசுதாரர் திரு.வீ.கார்த்திக் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (சி2) துறை

அரசாணை (3 ப) எண். 15

நாள்: 22.12.2020
சார்வரி வருடம், மார்கழி – 7
திருவள்ளுவர் ஆண்டு 2051
படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு துறை, நாள் 23.01.2020.
2. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதம் எண்.16229/டி3/2020, நாள் 18.9.2020.

-----

ஆணை:-

மேலே இரண்டில் படிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், தொழில்நுட்பக் கல்வி துறையைச் சார்ந்த அறந்தாங்கி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றிய திரு.சி.வீரையா, என்பவர் பணியிலிருக்கும் போது 02.05.2012 அன்று மரணமடைந்து விட்டதால், அவரது மகன் திரு.வீ.கார்த்திக், என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 08.09.2014 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், அதனைத் தொடர்ந்து கருணை அடிப்படையில் பணி நியமனம் குறித்து மேலே ஒன்றில் படிக்கப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையால் வெளியிடப்பட்ட அரசாணையின்படி அவரது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டது. இவர் பத்தாம் வகுப்பு இறுதி பொதுத் தேர்வில் ஜீன் 2003-ல் தேர்ச்சி பெற்றுள்ளார். அன்னாரின் பிறந்த தேதி 03.06.1988. திரு.வீ.கார்த்திக் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கான கல்வித் தகுதி, வயது மற்றும் 3 ஆண்டுகளில் விண்ணப்பம் அளித்தல் ஆகிய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததால், தனியர் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணி நியமனம் செய்து, தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.43743/டி3/2014, நாள்.22.08.2019–இல் ஆணை வழங்கப்பட்டு திரு.வீ.கார்த்திக், அறந்தாங்கி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் 28.08.2019 முற்பகல் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார் எனவும், இளநிலை உதவியாளர் பதவி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வரம்பிற்குட்பட்டதால் கருணை

அடிப்படையில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்ட திரு.வீ.கார்த்திக், என்பவரின் பணியினை, தனியர் பணியில் சேர்ந்த நாளான 28.08.2019 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி தக்க அரசாணை வழங்கும்படி தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேற்கண்ட தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் கருத்துருவானது அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டு, அதனையேற்று, அறந்தாங்கி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் திரு.வீ.கார்த்திக், என்பவர் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணியில் சேர்ந்த நாளான 28.08.2019 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்குத் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன் தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதும் இருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதி உடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண். 20244/ட்டி1/2020, நாள்: 15.12.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த (ஜி) துறையின் அ.சா.எண். 34162/ஜி1/2020, நாள்: 19.12.2020–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
அரசு முதன்மை செயலாளர்

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், சென்னை–25.
திரு.வீ.கார்த்திக், அறந்தாங்கி, அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி,
(தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் வழியாக)

நகல்
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (ட்டி1) துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்த (ஜி1) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், உயர்கல்வித்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

22/12/2020
பிரிவு அலுவலர்

22/12/2020